RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 219 | ஆகஸ்டு.11 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## இந்தியா வல்லரசாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது: ட்ரம்ப் வரிக்கு ராஜ்நாத் சிங் பதிலடி



புதுடெல்லி, ஆக.11-

அமெரிக்காஇந்தியா வரி பிரச்சினை பூதாகரமாகி வரும் நிலையில், "இந்தியா வல்லரசாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது" என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

இந்தியா மீது 50 சதவிகித வரியை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த நிலையில், மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கடுமையாக அமெரிக்காவை விமர்சித்துள்ளார். மத்திய பிரதேசத்தில் ரைசன் என்ற பகுதியில் ரயில் உற்பத்தி மையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். பின்னர் அவர் பேசியபோது, "இந்தியா தொடர்ந்து வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனால், அதனை சிலர் விரும்புவதில்லை, பொறுத்துக் கொள்ளவும் முடியவில்லை. எல்லோருக்கும் முதலாளி என்று தன்னை நினைக்கும் சிலர், இந்தியாவின் வேகமான வளர்ச்சி பற்றி யோசனை செய்கின்றனர். இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களின் விலையை அதிகமானதாக மாற்ற சிலர் முயற்சிக்கின்றனர். அப்படி, விலையேறினால் இந்திய பொருள்களை மற்ற நாடுகள் வாங்குவதை நிறுத்தும் என்று கருதுகின்றனர். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இந்தியா தொடர்ந்து வேகமாக முன்னேறிக் கொண்டேதான் இருக்கிறது. இந்தியா வல்லரசாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது. தற்போது, பாதுகாப்புத் துறைசார்ந்த ஏற்றுமதிகள் எதுவும் பாதிக்கப்படவில்லை. நாட்டின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இதுதான் இந்தியாவின் பலம்" என்று தெரிவித்தார்.

## விநாயகர் சிலை கரைப்பால் நீர்நிலை மாசு அடையுமா? மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு இந்து முன்னணி கண்டனம்



சென்னை, ஆக.11-

நீர் நிலைகளில் விநாயகர் சிலைகளை கரைப்பதால்தான் மாசு ஏற்படுமா, கழிவு நீர், ரசாயனக் கழிவுகள் நீர் நிலைகளில் கலப்பது மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு தெரியவில்லையா, என இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தீபாவளி, பொங்கல், விநாயகர் சதுர்த்தி வந்தால்தான் தமிழகத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒன்று இருப்பது வெளியில் தெரிகிறது. பொங்கலின்போது புகையில்லாத பண்டிகை என விளம்பரம் செய்வது போல, பக்ரீத்தின்போது ரத்தமில்லாத பண்டிகை என மாசு கட்டுப்பாட்டு வாரியம் பேசுவதில்லை.

வீடுகளில், பொது இடங்களில் ஆடு மாடுகளை பலியிடுவது நுண்ணுயிர் தொற்று உருவாக வாய்ப்பு உண்டு என்பதை என்றாவது தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் முணுமுணுத்தது உண்டா, கிறிஸ்துமஸின் போது மெழுகுவர்த்தி ஏற்றுவதால் அதன் புகை புற்றுநோயை உருவாக்கும் தன்மை உடையது, எனவே அதனை தவிருங்கள் என விளம்பரப்படுத்தியது உண்டா?

இன்று சிறு கிராமங்களில்கூட சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பயன்படுத்தும் நிலை இருப்பதை பார்க்கிறோம். காரணம் நீர் நிலைகள் அதிலும் ஆற்று நீரில், கழிவுநீர், ரசாயனக் கழிவுகள் நேரடியாக ஆண்டு முழுவதும் கலக்கிறது. அதுபோல, பல ஆண்டுகளாக கேரள மாநிலத்தில் இருந்து தமிழக எல்லைகளில் ஆபத்தான ரசாயனக் கழிவுகளை பல நூறு லாரிகளில் கொட்டிய செய்தி ஊடகங்களில் வந்தபோதும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, ஆண்டுக்கு ஒருசில நாட்களுக்கு மட்டுமே நடக்கும் மக்கள் விழாவுக்கு தமிழக அரசும்,தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியமும் அறிவிப்புகளை வெளியிடும்அதே பார்வையில், நீர்நிலைகளில் ஆண்டு முழுவதும் மாசு ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## உக்ரைன் அமைதிக்காக அறிக்கை வெளியிட்ட ஐரோப்பிய தலைவர்கள்: ஜெலன்ஸ்கி நன்றி

கீவ், ஆக.11-

உக்ரைன் தேசத்தின் அமைதிக்காக இன்று உக்ரைனுக்கும், மக்களுக்கும் ஆதரவு அளிப்பவர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என அந்த நாட்டின் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022ம் ஆண்டு தொடங்கிய உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை நிறுத்த பல்வேறு உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகி உள்ள ட்ரம்ப், தனது தேர்தல் பிரச்சாரம் மற்றும் பல்வேறு உரைகளில் தொடர்ந்து உக்ரைன் ரஷ்யா போர் நிறுத்தம் குறித்து பேசி வருகிறார்.

இந்த சூழலில் ஐரோப்பாவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்கள் உக்ரைனில் அமைதி திரும்ப வேண்டும் என கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர். இதில் பிரான்ஸ் அதிபர் மக்ரோன், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, ஜெர்மனியின் அதிபர் ஃபிரெட்ரிக் மெர்ஸ், பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர், போலந்து பிரதமர் டொனால்டு டஸ்க், பின்லாந்து அதிபர் ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

"போரின் முடிவு நியாயமானதாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன். உக்ரைனின் அமைதிக்காக உக்ரைனுடனும், மக்களுடனும் நிற்கும் அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். இது நமது ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு நலனை உறுதி செய்கிறது.

உக்ரைனின் அமைதிக்காக பேசி அறிக்கை வெளியிட்டுள்ள அதிபர் மக்ரோன், பிரதமர் மெலோனி, அதிபர் மெர்ஸ், பிரதமர் ஸ்டார்மர், பிரதமர் டஸ்க், அதிபர் ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோரை உக்ரைன் முழுமையாக ஆதரிக்கிறது" என ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

## பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கை கலந்தாய்வு: 3ம் சுற்றில் 64,629 மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு



சென்னை: ஆக.11-

பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கை கலந்தாய்வின் 3வது சுற்றில் 64,629 மாணவர்களுக்கு இடங்கள் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.


தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 423 பொறியியல் கல்லூரிகளில் இளநிலைப் படிப்புகளுக்கு ஒரு லட்சத்து 87,227 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் உள்ளன. இவற்றை நிரப்புவதற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு கடந்த ஜூலை 7ம்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. முதல் 2 சுற்று கலந்தாய்வு முடிவில் 92,423 இடங்கள் நிரம்பியுள்ளன. எஞ்சிய 92,605 இடங்களுக்கான 3ம் சுற்று கலந்தாய்வு ஆகஸ்ட் 7ம் தேதி தொடங்கியது. இதில் பங்கேற்க ஒரு லட்சத்து 1,589 மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதில் கலந்தாய்வில் பங்கேற்று தங்களுக்கு பிடித்தமான கல்லூரிகளை தேர்வு செய்த 62,533 மாணவர்களுக்கு தற்காலிகமாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளி மாணவருக்கான 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் 2,096 பேருக்கு தற்காலிக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தற்போது தற்காலிக ஒதுக்கீடு ஆணை பெற்றவர்கள் அதை நேற்று (ஜூலை 11) மாலை 5 மணிக்குள் கட்டாயம் உறுதிசெய்ய வேண்டும். அப்போதுதான் இறுதி ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும்.

தொடர்ந்து இறுதி ஒதுக்கீட்டு ஆணை நாளை(ஆகஸ்ட்12) காலை 10 மணிக்கு வெளியிடப்படும். அதை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து ஆகஸ்ட் 17ம் தேதிக்குள் அந்தந்த கல்லூரிகளில் சேர வேண்டும். அப்வேர்டு (upward) அளித்த மாணவர்களுக்கு ஆகஸ்ட் 20ம் தேதி ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும். அன்றுடன் பொது கலந்தாய்வு நிறைவு பெறுகிறது. இதுதொடர்பான கூடுதல் விவரங்களை www.tneaonline.org எனும் வலைத்தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

இதற்கிடையே பொறியியல் படிப்புகளுக்கான சிறப்பு மற்றும் பொதுப்பிரிவு கலந்தாய்வு இறுதிகட்டத்தை எட்டியநிலையில், மொத்தமுள்ள 1.87 லட்சம் இடங்களில் சுமார் 1.58 லட்சம் இடங்கள் நிரம்பியுள்ளன. சுமார் 29 ஆயிரம் இடங்கள்வரை காலியாகியுள்ளன. இவை துணை கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட உள்ளதாக துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

## தகுதி உள்ள அனைவருக்கும் மகளிர் உரிமை தொகை: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தகவல்



ராஜபாளையம், ஆக.11-

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அடிப்படையில் விரைவில் தகுதி உள்ள அனைத்து பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என வருவாய்த் துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ராஜபாளையம் அருகே சேத்தூர் பேரூராட்சியில் ரூ.5.96 கோடி மதிப்பில் குளிர் சாதன வசதி உடன் திருமண மண்டபம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தலைமை வகித்தார். எம்.பி ராணி, எம்.எல்.ஏ தங்கபாண்டியன் முன்னிலை வகித்தனர். இதில், வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.1 கோடி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.3.46 கோடி, பொது நிதியில் ரூ.1.50 கோடி என மொத்தம் ரூ.5.96 கோடி திருமண மண்டபம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்காக சார் பதிவாளர் அலுவலகம் அருகே 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. திருமண மண்டப கட்டுமானப் பணிக்கு வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் விழாவில் பேசிய அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கூறியதாவது: "சமுதாய கூட்டங்களில் உணவு உண்ணும் இடம், கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் இருக்காது. ஆனால் இந்த திருமண மண்டலத்தில் அனைத்து வசதிகளும் இருக்கும். எம்எல்ஏ பேசுவதை வைத்தே தேர்தல் வந்து விட்டது என்பதை தெரிந்து கொண்டோம். உரிமையோடு உங்களிடம் வாக்கு கேட்பதற்காக இந்த பணிகளை செய்கிறோம்.

கடந்த முறை பெறப்பட்ட 1.60 கோடி விண்ணப்பங்களில் 1.15 கோடி பேருக்கு மகளிர் உரிமை தொகை வழங்கப்பட்டது. தற்போது "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் மகளிர் உரிமை தொகை விண்ணப்பம் பெறப்பட்டு உடனடியாக ஆன்லைனில் பதிவு செய்யப்படுகிறது. விரைவில் தகுதி உள்ள அனைவருக்கும் மகளிர் உரிமை தொகை வழங்க வேண்டும் என முதல்வர் கூறி உள்ளார்" என்று அமைச்சர் கூறினார்.

முன்னதாக ராஜபாளையம் மாயூரநாத சுவாமி கோயிலில் ரூ.70 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் அமைக்கும் பணியை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மதுரை மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மணிகண்டன், பேரூராட்சி தலைவர் பால சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இந்திய விமானங்கள் தங்கள் வான்வெளியில் பறக்க தடை: பாகிஸ்தானுக்கு 2 மாதங்களில் ரூ.1,240 கோடி இழப்பு

**இஸ்லாமாபாத், ஆக.11–**

பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான் எல்லையை பயன்படுத்த தடை விதித்தது அந்நாட்டு அரசு. இந்திய அரசும் இதே நடவடிக்கையை கையில் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் 24ம் தேதி இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான் எல்லையை பயன்படுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்போது முதல் கடந்த ஜூன் 30ம் தேதி வரையிலான காலகட்டத்தில் மட்டும் இதனால் பாகிஸ்தானுக்கு சுமார் 1,240 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் 4.1 பில்லியன். இதை அந்த நாட்டின் செய்தி நிறுவனம் அரசு தரப்பு தகவல் உடன் உறுதி செய்து செய்தியாக வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் இதை பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் உறுதி செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. பஹல்காம் தாக்குதலை அடுத்து சிந்து நதி நீரை நிறுத்தியது. இதற்கு எதிர்வினையாற்றும் வகையில் பதிவு செய்யப்பட்ட இந்திய விமானங்கள், இந்திய விமான நிறுவனங்கள் சார்பில் இயக்கப்படும் விமான ங்கள் என இந்திய தொடர்பு கொண்ட அனைத்து விமானங்களுக்கும் பாகிஸ்தான் தடை விதித்தது.

இதன் காரணமாக பாகிஸ்தான் நாட்டின் வான் போக்குவரத்து சுமார் 20 சதவீதம் குறைந்துள்ளது. இந்த தடை நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நாள் ஒன்றுக்கு 100 முதல் 150 இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்தி வந்ததாக தகவல். இப்போது அது முற்றிலுமாக தடைப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்தியாவில் இருந்து அயல்நாடுகளுக்கு செல்லும் இந்திய விமானங்கள் மாற்றுப்பாதையில் தடையின்றி பயணத்தை தொடர்ந்து வருகிறது. மறுபக்கம் பாகிஸ்தானுக்கு இதே உத்தரவை இந்தியா பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே நிதி நெருக்கடியால் பாகிஸ்தான் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய வான்வெளியை பாகிஸ்தான் விமான நிறுவனங்கள் பயன்படுத்த முடியாத காரணத்தால் பயண நேர நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக பாகிஸ்தானில் இருந்து தென்கிழக்கு ஆசியாவுக்கு செல்லும் விமானங்கள் இந்திய வான்வெளியை தவிர்க்க வேண்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

வரும் 24ம் தேதி காலை 4.59 மணி வரையில் இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த தடை உத்தரவு பிறப்பித்துள்ளது அந்த நாட்டு விமான போக்குவரத்து ஆணையம்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மற்றும் அமைவிடங்களை இந்தியா அழித்தது. தொடர்ந்து பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சியையும் இந்திய முறியடித்தது. பின்னர் இருதரப்புக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம், இந்தியா மட்டுமின்றி சர்வதேச அளவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.




# மானாமதுரை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க 10ஆவது கிளைமாநாடு கிளைத்தலைவர் தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது




மானாமதுரை, ஆக.11-

மானாமதுரை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க 10ஆவது கிளைமாநாடு கிளைத்தலைவர் தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் பாலமுருகன், பொதுப்பணித்துறை பொன்னையா, கவிஞர் சோமசுந்தரபாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முனைவர் அழகுமுருகன் வரவேற்புரையாற்றினார். கிளைச் செயலாளர் ரசீந்திரகுமார் ஸ்தாபனம் மற்றும் செயல் அறிக்கை சமர்ப்பித்து பேசினார். இம்மாநாட்டை வாழத்தி நகர்மன்ற துனைத்தலைவர் பாலசுந்தரம், முன்னாள் தலைமையாசிரியர் பட்டிமன்ற பேச்சாளர் திருமாவளவன், விவசாய சங்க ஒன்றிய தலைவர் பராமாத்மா, தாய் இல்ல நிறுவனர் புஷ்பராஜ் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். ஓவிய கண்காட்சியை முன்னாள் மாவட்ட கவுன்சிலர் மாரிமுத்து, புத்தக கண்காட்சியை நகர்மன்ற உறுப்பினர் சித்ரா மன்னர் மன்னன், புகைப்பட கண்காட்சியை சீமைச்சாமி, மண்பாண்ட கண்காட்சியை நகர்மன்ற உறுப்பினர் சோமசதிஷ்குமார் ஆகியோர் துவக்கிவைத்தனர். சிறப்பாக சமூக சேவையாற்றிய ஆர் ஆர் ஆம்புலன்ஸ் ராஜேந்திரனுக்கு பாராட்டி விருது வழங்கப்பட்டது. மானாமதுரையில் அரசுஆண்கள்மேல்நிலைப் பள்ளி தொடங்கிடவும், நூலகத்திற்கு அடிப்படை வசதிகள் செய்திடக்கோரியும், அரசுபெண்கள் மேல்நிலை பள்ளிக்கு அடிப்படை வசதிகள் விளையாட்டு மைதானம் அமைத்திட கோரியும், பள்ளி பாடப்புத்தகங்களில் மண்பாண்டங்கள் சிறப்புகள் குறித்து சேர்க்கவும், மானாமதுரையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கியதற்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்களை முன் மொழிந்து மாவட்டக்குழு உறுப்பினர் நந்தினி, ஆனந்தகுமார், லூர்து, பாண்டி, ராஜாராமன், விய ஆசிரியர் செல்வம், சரவணக்குமார், ஆகியோர் பேசினார்கள். தேசிய விருதுபெற்ற குறும்படங்களை அலைகள் நாராயணன் திரையிட்டார். இம்மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தலைவராக தேவதாஸ், செயலாளராக ரசீந்திரகுமார், பொருளாராக பாரதிதங்கராஜ் உட்படதுணைநிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களாக பதினைந்து பேர் தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக ஆசிரியர் சபரிராஜன் நன்றியுறையாற்றினார்.




# மதுரை ஸ்ரீ பாடசாரி கங்கை அம்மன் ஆடிதிருவிழா முன்னிட்டு, குடியாத்தம் புதிய நீதி கட்சியின் சார்பில் அன்னதான விழா

வேலூர், ஆக.11-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, மோடி தற்போது மதுரை மத்தியப் பள்ளி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ பாடசாரி கங்கை அம்மன் ஆடித்திருவிழா முன்னிட்டு புதிய நீதி கட்சியின் சார்பாக மாபெரும் அன்னதானம் வழங்கும் விழா, மண்டல செயலாளர் ப.சரவணன் தலை மையில் நடைபெற்றது. இதில் வெங்கடேசன், சசிகுமார், மோகன், உமா மகேஸ்வரி முன்னிலை வகித்தனர், மாவட்ட செயலாளர் பிரம்மாஸ் செந்தில், நகர செயலாளர், கைத்தறி காவலன் எஸ்.ரமேஷ், அமுமுக மாவட்ட இளம் பெண்கள் பாசறை செயலாளர் கௌதமி சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மாபெரும் அன்னதானம் வழங்கும் விழாவை சிறப்பித்தனர்.



# ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழாவை முன்னிட்டு 1000 நபர்களுககு சம்பந்தி அறுசுவை விருந்து

தாம்பரம், ஆக்.11-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் இரும் புலியூர் வாணியன்குளம் பகுதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் 66ம் ஆண்டு ஆடிததிருவிழா மற்றும் 2ம் ஆண்டு தீமிதி விழா தீருவிழா வெகு விமர்சியாக நடைபெற்று கொண்டு வருகிறது ஆடி திருவிழா முன்னிட்டு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் 1000 நபர்களுக்கு சம்பந்தி அறுசுவை விருந்து தாம்பரம் மாநகர மத்திய பகுதி செயலாளர் எல்லார். செரழியன் தலைமையில் மத்திய பகுதி டி.அருண் ஏற்பாட்டில் நடைபெற்றது காத்தவராயன், வெற்றி, குமுணன், சரவணன், கலையரசன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற சம்பந்தி விருந்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னய்யா ஆகியோர் கலந்து கொண்டு ஸ்ரீ கருமாரியம்மனை வழிபட்டு பின்னர் அறுசுவை உணவு வழங்கினார். இதில் மகளிர் அணி நர்வாகி மாலினி, தனலட்சுமி ஏராளமான பொது மக்கள் சம்பந்தி விழாவில் கலந்து கொண்டு உணவருந்தினர்.

# பெண்களிடையே ஆரம்ப நிலை மார்பக புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்த நவீன மார்பக மையம்: ஐஸ்வர்யா மருத்துவமனை திறந்தது

## வேகமாக மற்றும் துல்லியமாக கண்டறிய அதிநவீன இமேஜிங் தொழில்நுட்பம் அறிமுகம்

சென்னை, ஆக.11-

10 ஆகஸ்ட் 2025 இடம் : ஓ.எம்.ஆர். சாலை, தரமணி, காலை 10:30 மணிக்கு பெண்களுக்கு சிறந்த மருத்துவ சேவைகளை வழங்கும் விதமாக மார்பக புற்று நோய் குறித்து ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்கு சிறப்பு சிகிச்சை அளிக்கும் வகையில் அதிநவீன வசதிகளுடன் கூடிய மார்பக மையத்தை ஐஸ்வர்யா மருத்துவமனை அறிமுகம் செய்துள்ளது. ஐஸ்வர்யா மார்பக மையம், டோமோசிந்தசிசுடன் கூடிய மேம்பட்ட 3D டிஜிட்டல் மேமோகிராபி தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. இது அடுத்த தலைமுறை இமேஜிங் தொழில்நுட் பமாகும், இதன் மூலம் புற்றுநோய் கட்டிகளை விரைவா கவும் துல்லியமாகவும் கண்டறிந்து சிறப்பான சிகிச்சை அளித்து நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முடியும்.




இந்த மையம், வழக்கமான மார்பகப் பரிசோதனைகள், அது சம்பந்தமான ஆலோசனைகள் மற்றும் குடும்ப பின்னணி அடிப்படையிலான பாதிப்புகள் உள்ளிட்ட, அனைத்திற்கும் தரமான சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்க திறக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை மார்பக பரிசோ தனை செய்வதை பெண்களிடையே வலியுறுத்துவதே எங்களின் முக்கிய நோக்கமாகும் என்று இம்மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இது குறித்து சிறப்பு விருந்தினர் சின்மயி ஸ்ரீபாதா கூறுகையில், பெண்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு பற்றி வெளிப்படையாகப் பேசி வரும் நான், ஆரம்பகால பரிசோதனை எவ்வளவு முக்கியம் என்பதை நன்கு அறிவேன். மார்பக ஆரோக்கியம் குறித்த வதந்திகள் முடிவுக்கு வர வேண்டும், மேலும் இது போன்ற மையங்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை மாற்றும் என நம்புகிறேன். அதிகமான பெண்கள் தயக்கமின்றி இங்கு வந்து, அவர்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு சரியான ஆலோசனைகளை பெற்று, தங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

மார்பக மையம் திறக்கப்பட்டு இருப்பது குறித்து, ஐஸ்வர்யா மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் புற்றுநோயியல் பிரிவு இயக்குனர், டாக்டர். எஸ். ராஜசுந்தரம் கூறுகையில், இந்தியப் பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் என்பது மிகவும் பொதுவான ஒன்றாக இருந்து வருகிறது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 4 பேரில் ஒருவருக்கு மார்பக புற்று நோய் உள்ளது. இதற்கு காரணம், போதிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும் தாமதமான பரிசோதனை ஆகியவை ஆகும். மார்பக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 50 சதவீதம் பேர் அது முற்றிய நிலையில் கண்டறியப்படுகிறார்கள். எனவே இதை ஆரம்ப நிலையில் கண்டறியும்போது அதை எளிதாக குணப்படுத்த முடியும். எனவே அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே நாங்கள் மார்பக மையத்தை திறந்துள்ளோம்.

மேலும் மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும்போது நோயாளி உயிர் பிழைக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது. இருப்பினும், பயம், களங்கம் அல்லது போதிய மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் பல பெண்கள் இன்னும் வழக்கமான பரிசோதனைகளை செய்யத் தயங்குகிறார்கள் அல்லது தவிர்க்கிறார்கள். இந்த மையத்தில், குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதிநவீன 3D மேமோகிராபியைப் பயன் படுத்தி சரியான நேரத்தில், துல்லியமான மற்றும் வலியற்ற பரிசோதனை செய்யப்படும். தாமதமாக நோயை கண்டறிவதன் மூலம் ஏற்படும் விளைவுகளை தவிர்க்கும் வகையில் ஆண்டுக்கு ஒரு முறை அவர்கள் மார்பக பரிசோதனை செய்வது மிகவும் நல்லது என்று தெரிவித்தார்.

ஐஸ்வர்யா மார்பக மையத்தின் இயக்குனர் டாக்டர் தீபா சேகு கூறுகையில், ஆல்இன்ஒன் மார்பக மையம் என்பது காலத்தின் கட்டாயமாகும். மார்பக விழிப்புணர்வு, மார்பக ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளித்து, அவர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதே ஐஸ்வர்யா மார்பக மையத்தின் முக்கிய குறிக்கோள் என்று தெரிவித்தார்.

ஐஸ்வர்யா மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் அருண் முத்துவேல் கூறுகையில், மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு குறித்த பார்வையை மாற்ற நாங்கள் விரும்புகிறோம். ஒவ்வொரு பெண்ணும் தாமதமோ அல்லது தயக்கமோ இல்லாமல் உலகத் தரம் வாய்ந்த சிகிச்சையைப் பெற தகுதியானவர்கள். இந்த மையம் மருத்துவ சிறப்பையும் நோயாளிக்கான ஆறுதலையும் ஒருங்கே கொண்டுள்ளது. இங்கு வெறும் மருத்துவ பரிசோதனைகள் மட்டும் செய்யப்படாமல் பெண்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு சிறப்பான பதில்களுடன் சிறந்த ஆலோசனைகளையும் வழங்கி அவர்களுக்கு தேவையான ஆதரவை இந்த மையம் வழங்கும் என்று தெரிவித்தார்.

ஐஸ்வர்யா மார்பக மையம் 3ஞி டிஜிட்டல் மேமோகிராபி, மார்பக கட்டிகள் மற்றும் வலிக்கான ஆலோசனைகள், மார்பகப் புற்றுநோயின் குடும்ப பின்னணி கொண்ட பெண்களுக்கான பரிசோதனை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட மதிப்பீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட மருத்துவ சேவைகளை வழங்கும்.



# குரோம்பேட்டையில் பம்மல் தெற்கு பகுதி சார்பில் 5000 மேற்பட்ட திமுகவினர் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

தாம்பரம், ஆக.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் 115 கோடி செலவில் செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை உயர் சிறப்பு மருத்துமனை திறந்து வைத்து 20,021 பயனாளிகளுக்கு இலவச பட்டா மற்றும் நல திட்ட உதவிகள் வாழ்வதற்கு வருகை தந்த முதல்வர் முக.ஸ்டாலினுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனத்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின்படி பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி தலைமையில் 5000 மேற்பட்ட திமுகவினர் குரோம்பேட்டை பாலாஜி பவன் அருகில் சிறப்பான வரவேற்பு அளித்தனர் இதில் பகுதி நிர்வாகிகள் மாவட்டம் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்




# தாம்பரத்தில் மாபெரும் தீர்மான விளக்க கூட்டம் மற்றும் மாபெரும் பேரணி

தாம்பரம், ஆக.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தீர்மான விளக்க கூட்டம் மாபெரும் கோரிக்கைகளை முன்வைத்து மதுரையில் ஜூலை 6'அன்று நடைபெற்ற மாபெரும் பேரணி மற்றும் மாநாட்டின் கோரிக்கை விளக்க கூட்டம், செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் முழுவதும் ஒரே நாள் (08/08/25) மற்றும் ஒரே நேரத்தில் (மாலை 7'மணி) நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக தாம்பரம் மத்திய பகுதி தலைவர் எம்.ஜலாலுதீன் தலைமையில் தாம்பரம் 50'வது வார்டில் தீர்மான விளக்க கூட்டம் நடைபெற்றது.

இதில் மனிதநேய மக்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப், மாநில செயலாளர் பழனி பாருக், தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் பேரவை மாநில பொருளாளர் சகோதரி ஷான்ராணி, ஆலிமா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொருளார் எம்.சபியுல்லா மற்றும் இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமீம் அன்சாரி உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகளும் பகுதி கிளை நிர்வாகிகளும் பொது மக்களும் திரளாக கலந்து கொண்டனர்

# தீபாவளி, சாத் பண்டிகை கால சலுகை: ரயில் ரிட்டர்ன் டிக்கெட்களுக்கு 20 சதவீதம் தள்ளுபடி

புதுடெல்லி, ஆக.11-

தீபாவளி மற்றும் சாத் பண்டிகை காலங்களில் சொந்த ஊர் செல்லும் பயணிகளுக்கு ஆர்டிபி (Round Trip Package) என்ற புதிய திட்டத்தை சோதனை அடிப்படையில் ரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி முன்பதிவு டிக்கெட் உடன் ரிட்டர்ன் டிக்கெட்டையும் சேர்த்து முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு ரிட்டர்ன் டிக்கெட்டில் 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட உள்ளது. டிக்கெட் முன்பதிவில் பயணிகளுக்கான சிரமங்களை குறைப்பதும், அவர்களுக்கு சவுகரியமாக பயணத்தை உறுதி செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆர்டிபி திட்டத்தின் கீழ் முன்பதிவு வரும் 14ம் தேதி தொடங்க உள்ளது. அக்டோபர் 13 முதல் அக்டோபர் 26 வரை பயணத்தை தொடங்கும் மக்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். இவர்களின் ரிட்டர்ன் பயணம் நவம்பர் 17 முதல் டிசம்பர் 1 வரை முன்பதிவு செய்யப்பட வேண்டும். ஆர்டிபி திட்டத்தின் கீழ் இரு மார்க்கங்களில் உறுதி செய்யப்பட்ட பயணம், தொடங்கும் இடம், முடியும் இடம் ஒன்றாக இருப்பது ஒரே வகுப்பில் பயணம் செய்வதாக இருக்க வேண்டும்.



ரிட்டர்ன் டிக்கெட்டுக்கு அடிப்படை கட்டணத்தில் மட்டுமே 20% தள்ளுபடி கிடைக்கும். டைனமிக் கட்டண ரயில்கள் தவிர அனைத்து ரயில்களுக்கும் (சிறப்பு ரயில்கள் உட்பட), அனைத்து வகுப்புகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். இதற்கு ஐஆர்சிடிசி தளம் அல்லது முன்பதிவு கவுன்ட்டர்களில் முன்பதிவு செய்யலாம் என ரயில்வே அறிவித்துள்ளது.



# 28 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டிஸ்கோ சாந்தி

ராகவா லாரன்ஸ், அவருடைய சகோதரர் எல்வின் இணைந்து நடித்துள்ள படம், புல்லட்.

இதில் வைஷாலி ராஜ், சுனில், அரவிந்த் ஆகாஷ், காளி வெங்கட், ரங்கராஜ் பாண்டே உள்ளிட்டோர் நடிக்கின்றனர். சாம் சி.எஸ். இசையமைக்கிறார். அரவிந்த் சிங் ஒளிப்பதிவு செய்கிறார். 'டைரி' படத்தை இயக்கிய இன்னாசி பாண்டியன் இயக்குகிறார். ஃபைவ் ஸ்டார் கிரியேஷன்ஸ் கதிரேசன் தயாரிக்கிறார். இதன் தமிழ் டீஸர் வெளியிடப்பட்டுள்ளது.

1980 மற்றும் 90களில் பிரபல நடிகையாக விளங்கிய டிஸ்கோ சாந்தி இந்தப் படத்தின் மூலம், 28 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடிக்க வந்திருக்கிறார்.

கடந்த 1997ம் ஆண்டு முதல் படங்களில் நடிக்காத அவர், இதில் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். படம் பற்றிப் பேசிய இன்னாசி பாண்டியன், "இது முழு நீள அமானுஷ்ய ஆக் ஷன் த்ரில்லர் படம். இந்த கதையை தான் முதல் படமாக இயக்க இருந்தேன். சில காரணங்களால் அது இயலவில்லை. இதை எனது 2வது படமாக இயக்கி வருகிறேன்" என்று கூறினார்.




# வெற்றி நடிக்கும் 'பிளாக் கோல்டு'

வெற்றி, பிரியாலயா, லிவிங்ஸ்டன், துளசி, பிக்பாஸ் அபிராமி, ஏ.வெங்கடேஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம், "பிளாக் கோல்டு".

தீரன் அருண்குமார் இயக்கியுள்ள இந்தப் படத்தை எம்எம் ஸ்டூடியோஸ் சார்பில் எம்.மூர்த்தி வழங்குகிறார். சந்தோஷ்குமார் வீராசாமி ஒளிப்பதிவு செய்துள்ளார். கவாஸ்கர் அவினாஷ் இசை அமைத்துள்ளார். இதன் முதல் தோற்ற போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

"நடுத்தர குடும்பத்து இளைஞனுக்கும் பெரிய வணிக மாபியாக்களுக்கும் இடையே நடக்கும் பிரச்சினையைச் சொல்லும் படம் இது. உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் கதை உருவாகியுள்ளது. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் இதன் படப்பிடிப்பு நடந்துள்ளது" என்றது படக்குழு.



# நடிகை ரம்யாவுக்கு எதிராக ஆபாச புகைப்படம் வெளியிட்ட வாலிபர் கைது

கர்நாடக மாநிலம் சித்ரதுர்காவை சேர்ந்த ரேணுகாசாமி கொலை வழக்கில் நடிகர் தர்ஷனுக்கு எதிராக நடிகை ரம்யா கருத்து தெரிவித்திருந்தார். இதற்கு எதிராக நடிகை ரம்யா குறித்து சமூக வலைதளங்களில் நடிகர் தர்ஷனின் ரசிகர்கள் அவதூறாக கருத்துகளை வெளியிட்டனர். இதுபற்றி பெங்களூரு போலீஸ் கமிஷனர் சீமந்தகுமார் சிங்கிடம் நடிகை ரம்யா புகார் அளித்தார்.

அதன்பேரில், பெங்களூரு மத்திய மண்டல சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ரம்யா குறித்து அவதூறு மற்றும் ஆபாசமாக கருத்துகளை வெளியிட்டதாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நடிகை ரம்யா பற்றி அவதூறு கருத்து வெளியிட்டதாக கே.ஆர்.புரத்தை சேர்ந்த பிரமோத் கவுடா (வயது 20) என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர். இதனால் கைதானவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. கைதான பிரமோத் கவுடா ரம்யாவுக்கு எதிராக ஆபாச புகைப்படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டு இருந்ததுடன், அவரை மிரட்டும் விதமாக அவதூறு கருத்துகளையும் வெளியிட்டு இருந்தார்.

பிரமோத் கவுடா தனது நண்பரின் செல்போனை பயன்படுத்தி இந்த செயலை செய்திருந்தார். பிரமோத் கவுடா நடிகர் தர்ஷனின் ரசிகரா? என்பது பற்றி தெரிவிக்க போலீசார் மறுத்து விட்டனர். விசாரணைக்கு பின்பு அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# நாளை நமதே சினிமா விமர்சனம்:



சிவதாணுபுரம் என்கிற கிராமத்தில் ஆதிக்க சாதியினர் பெரும்பான்மையாகவும் பட்டியலின மக்கள் சிறுபான்மையாகவும் வசிக்கிறார்கள். பொதுத் தொகுதியாக இருக்கும் அதன் ஊராட்சிமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த வகையிலும் முன்னேறவில்லை. ஆனால், சாதிப்பற்று, சாதி வெறியில் முன்னேறியிருக்கும் அந்த ஊர், பட்டியலின வேட்பாளருக்கான தனித் தொகுதியாக மாறுகிறது. கொதித்தெழும் ஆதிக்க சாதியினர், பட்டியலின வேட்பாளரைக் கொலை செய்கிறார்கள். அதன் விளைவாகப் பழையபடி பொதுத் தொகுதியாகி, 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தனித் தொகுதியாகிறது. இம்முறை, ஏதும் செய்ய முடியாமல் ஒரு பொம்மை வேட்பாளரை ஆதிக்க வர்க்கம் நிறுத்த, அவருக்குப் போட்டியாகக் களமிறங்குகிறார், முன்பு கொலை செய்யப்பட்டவரின் பேத்தியான அமுதா. இதை எதிர்பார்க்காதவர்கள், அமுதாவைத் தோற்கடிக்க என்ன செய்கிறார்கள், அதை அமுதா எப்படி எதிர்கொண்டார் என்பது கதை.

அமுதா என்கிற சாமானியப் பெண், தன் குடும்பத்தின் பேரிழப்பு உருவாக்கிய வலி, தன்னுடைய மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குதல்கள் ஆகியவற்றிலிருந்து எழுச்சிபெற்று முன்னேறும் பெண் போராளியாகப் படைத்திருக்கிறார், எழுதி, இயக்கி, ஒரு கதாபாத்திரத்திலும் நடித்திருக்கும் வெண்பா கதிரேசன்.

ஒப்பனை பெரிதாக இல்லாமல், எளிய தோற்றத்தில் அமுதாவாக வரும் மதுமிதாவின் நடிப்பு இப்படத்தின் கதைக் களத்தை உயிரூட்டியிருக்கிறது. அமுதாவுக்கு எதிராகப் பரப்பப்படும் அவதூறுகள், பொய்ப் பிரச்சாரம், மிரட்டல்கள், கொலைவெறித் தாக்குதல் எனப் பதைபதைக்க வைக்கும் தடைகளைக் கடந்து வரும் காட்சிகளில், கண்களில் அதிகார வேட்கையை உறுதியாகத் தாங்கி, அமுதாவாக அவர் வசனம் பேசும் காட்சிகளில் அனல் பறக்கிறது. துணைக் கதாபாத்திரங்களில் வரும் பலரையும், பெரும்பாலும் மண்ணின் மக்களையே நடிக்க வைத்திருப்பதைப் பாராட்டலாம். அதேநேரம், அமுதாவைக் கொலை செய்ய வருபவர், மனநலம் குன்றிய பெண் போன்ற சில துணைக் கதாபாத்திரங்களைச் செயற்கையாகவும் நாடகத்தனமாகவும் நடமாட விட்டிருப்பதற்குக் கத்தரி வைத்திருக்கலாம். எளிய, குரலற்ற மக்கள், தங்களுக்கு அரசமைப்பு வழங்கும் ஆட்சிமன்ற அதிகாரத்தை அடைவதற்கான போராட்டத்தை மையமாக்கிய இக்கதையில், வசனத்தின் பங்கு கூர்மையானதாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து எழுதியிருப்பது, அனைத்துத் தரப்புப் பார்வையாளர்களின் மனதை நிச்சயமாக உலுக்கும். 'நாளை நமதே' ஒடுக்கப்பட்டவர்கள் அதிகாரத்தை அடைவதற்காக அழுத்தமான பயணம்.

# 2026 ஐபிஎல்லுக்காக அதிரடி மாற்றங்கள் சிஎஸ்கே அணியில் தொடரும் தோனி? சொதப்பல் வீரர்களை கழற்றிவிட திட்டம்



வரும் 2026ல் நடக்கவுள்ள ஐபிஎல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணியில் எம்.எஸ்.தோனி மீண்டும் இடம்பெறுவார் எனக் கூறப்படுகிறது. அதே சமயத்தில் சரியாக செயல்படாத பல வீரர்களை கழற்றி விட்டு புதியவர்களை சேர்ப்பதற்கான திட்டத்தில் அந்த அணி தீவிரம் காட்டி வருகிறது. நடப்பாண்டில் நடந்த ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணி, 14 போட்டிகளில் 4ல் மட்டுமே வென்று கடைசி இடத்தை பிடித்தது.

அதேபோல், ராஜஸ்தான் அணியும் 4ல் மட்டுமே வென்று கடைசி இடத்துக்கு முந்தைய, 9ம் இடத்தை பெற்றது. இதனால் இரு அணிகளிலும் வீரர்களை மாற்றுவது தொடர்பான திட்டங்கள் பேசப்பட்டு வருகின்றன. வரும் 2026ல் நடக்கும் அடுத்த சீசன் ஐபிஎல்லில் ஆடப்போவதில்லை என்பதற்கான சமிக்ஞை எதையும் தோனி இதுவரை வெளிப்படுத்தவில்லை. தவிர, மேலும் ஒரு சீசனில் தோனி ஆடினால் நல்லது என, சிஎஸ்கே நிர்வாகம் உறுதியாக நம்புகிறது. எனவே, 2026ல், சிஎஸ்கேவுக்காக தோனி ஆடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

அதேசமயம், கடந்த முறை அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டு சரிவர செயல்படாத வீரர்களை கழற்றி விட சிஎஸ்கே திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில் குறிப்பாக, சிஎஸ்கே அணியில் கடந்தாண்டு மீண்டும் சேர்க்கப்பட்ட ரவிச்சந்திரன் அஸ்வினின் (ரூ.9.75 கோடி) பெயர் பலமாக அடிபடுகிறது. தவிர, டெவோன் கான்வே (ரூ. 6.25 கோடி), ரச்சின் ரவீந்திரா (ரூ.4 கோடி), ராகுல் திரிபாதி (ரூ. 3.4 கோடி), சாம் கர்ரன் (ரூ. 2.4 கோடி), குர்ஜப்நீத் சிங் ( ரூ.2.2 கோடி), நாதன் எல்லிஸ் (ரூ.2 கோடி), தீபக் ஹூடா (ரூ.1.75 கோடி), விஜய் சங்கர் (ரூ. 1.2 கோடி) ஆகியோர் கழற்றி விடப்படும் பட்டியலில் இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

இதன் மூலமும், கையிருப்பில் உள்ள நிதியையும் சேர்த்து, ரூ. 40 கோடியுடன் அடுத்த ஏலத்தில் சிறந்த வீரர்களை வளைத்து போட சிஎஸ்கே திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையே ராஜஸ்தான் அணியில் இருந்து அதன் கேப்டன் சஞ்சு சாம்சன் வெளியேற உள்ளதாகவும் அவர் சிஎஸ்கே அணியில் சேர ஆர்வம் காட்டி வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மேலும், கேமரூன் கிரீன், மிட்செல் ஓவன், பென் ஸ்டோக்ஸ் ஆகிய வீரர்களில் ஒருவரை ஏலம் எடுப்பதில் சிஎஸ்கே ஆர்வம் காட்டும் என கூறப்படுகிறது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் வாகை சூடிய வெரோனிகா: 2வது சுற்றுக்கு முன்னேற்றம்



சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றுப் போட்டியில் நேற்று, ரஷ்ய வீராங்கனை வெரோனிகா குதர்மெடோவா அபார வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு முன்னேறினார். அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில், சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த முதல் சுற்றுப் போட்டி ஒன்றில் ரஷ்ய வீராங்கனை வெரோனிகா குதர்மெடோவா (28), நெதர்லாந்து வீராங்கனை சூசன் லாமென்ஸ் (26) மோதினர். முதல் செட்டை எவ்வித சிரமமுமின்றி 61 என்ற புள்ளிக் கணக்கில் வெரோனிகா கைப்பற்றினார்.

தொடர்ந்து நடந்த 2வது செட்டையும், 63 என்ற புள்ளிக் கணக்கில் அவரே வசப்படுத்தினார். இதன் மூலம் நேர் செட் கணக்கில் போட்டியில் வென்ற அவர் 2வது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு முதல் சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் கேதரின் மெக்னல்லி (23), ஆஸ்திரேலியா வீராங்கனை மேடிசன் இங்லீஸ் (27) உடன் மோதினார். துவக்கம் முதல் துடிப்புடன் செயல்பட்ட கேதரின் 62, 63 என்ற நேர் செட் கணக்கில் வென்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.



# ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப்: வெண்கலம் வென்று இந்தியாவின் ரமேஷ் புதிஹால் சாதனை

ஆசிய சர்ஃபிங் கூட்டமைப்பு சார்பில் ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் போட்டி மாமல்லபுரம் கடற்கரை பகுதியில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஓபன் பிரிவில் வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளார் இந்தியாவின் ரமேஷ் புதிஹால்.

இந்த போட்டியின் 6வது நாளான நேற்று ஆடவர் ஓபன் கால் இறுதி சுற்று ஹீட் 1ல் இந்தியாவின் ரமேஷ் புதிஹால் 14.84 புள்ளிகளை குவித்து முதலிடம் பிடித்து அசத்தினார்.

அரை இறுதியில் ரமேஷ் புதிஹால் ஹீட் 1ல் 11.43 புள்ளிகளுடன் 2வது இடம் பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் ஆசிய சர்ஃபிங் சாம்பியன்ஷிப் இறுதி போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய சர்ஃபர் என்ற பெருமையை பெற்றார்.

இறுதிப் போட்டி இன்று காலை நடைபெற்றது. இதில் ரமேஷ் புதிஹால் 12.60 புள்ளிகளை பெற்று வெண்கலம் வென்றார். இந்த பிரிவில் முதல் இரண்டு இடங்களை தென் கொரியாவின் கனோவா ஹீஜே (15.17), இந்தோனேசியாவின் பஜார் அரியானா (14.57) ஆகியோர் பிடித்தனர்.

# ஜிம்பாப்வே அணிக்கு எதிரான 2வது டெஸ்டில் நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ், 359 ரன் வித்தியாசத்தில் வெற்றி



ஜிம்பாப்வே அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 359 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது நியூஸிலாந்து அணி. இதன் மூலம் அந்த அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 20 என முழுமையாக கைப்பற்றி கோப்பையை வென்றது.

புலவாயோ நகரில் நடைபெற்று வந்த 2வது டெஸ்ட் போட்டியில் ஜிம்பாப்வே அணி முதல் இங்னிங்ஸில் 125 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. தொடர்ந்து விளையாடிய நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 130 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 601 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. டேவன் கான்வே 153, ஹென்றி நிக்கோல்ஸ் 150, ரச்சின் ரவீந்திரா 165, வில் யங் 74 ரன்கள் விளாசினர்.

476 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்ஸை விளையாடிய ஜிம்பாப்வே அணி நேற்றைய 3வது நாள் ஆட்டத்தில் 28.1 ஓவர்களில் 117 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபசட்மாக நிக் வெல்ச் 47, கேப்டன் கிரெய்க் இர்வின் 17 ரன்கள் சேர்த்தனர். மற்ற எந்த பேட்ஸ்மேன்களும் இரட்டை இலக்கை ரன்னை எட்டவில்லை.

நியூஸிலாந்து அணி தரப்பில் ஜக்கரி ஃபவுல்க்ஸ் 5 விக்கெட்களையும் மேட் ஹென்றி, ஜேக்கப் டஃபி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். இன்னிங்ஸ் மற்றும் 359 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 20 என முழுமையாக கைப்பற்றி கோப்பையை வென்றது. முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது.



# கூடுவாஞ்சேரியில் நடைபெற்ற இலவச கண் மருத்துவ முகாம் மற்றும் இலவச பொது மருத்துவ சிறப்பு முகாம்

கூடுவாஞ்சேரி, ஆக.11-

செங்கல்பட்டு மாவட்ட மொபைல் சேல்ஸ் சர்வீஸ் நல சங்கம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட மொபைல் சேல்ஸ் சர்வீஸ் ரீசார்ஜ் சங்கம் மற்றும் நந்திவரம் கூடுவாஞ்சேரி அபிமன் லயன் சங்கம் மற்றும் சங்கர நேந்த்ராலய கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாம் மற்றும் இலவச பொது மருத்துவ முகாம் அரசு பதிவு மருத்துவர் சு.சந்தோஷ் குமார் ஆகியோர் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரியில் அமைந்துள்ள மகாலட்சுமி நகர் துவாரக மழலையர் பள்ளியில் நடைபெற்றது.

இந்த கண் சிகிச்சை மருத்துவ முகாமில் கண் தூரபார்வை, கிட்டபார்வை உள்ளவர்களுக்கு (வறுமை கோட்டிற்க்கு கீழ்) மருத்துவரின் பரிந்துரை பேரில் இலவச கண் கண்ணாடி 50க்கும் மேற்பட்ட வர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் 10()க்கும் மேற்பட்ட வர்களுக்கு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் பொது மருத்துவர் சந்தோஷ் கிளினிக் சந்தோஷ் குமார் (10ரூபாய் டாக்டர்) இலவச பொது மருத்துவம் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இலவச மருத்துவம் செய்தார். இன் நிகழ்வில் நந்திவரம் கூடுவாஞ்சேரி அபிமன் லயன்ஸ் சங்கம் பி.அம்சவல்லி, லயன் விஜயகுமார், மண்டல தலைவர் லயன் அஷ்வின் குமார், வட்டாரத் தலைவர் லயன் பூபாலன், லயன் காந்தி ஈஸ்வரன், லயன் கீர்த்தனா, அஷ்வின் குமார், செயலாளர் லயன், தீபா விஜயகுமார், பொருளாளர் லயன் லாவண்யா வரதன் ஆகியோர் முன்னிலையில் நடைபற்றது. இன் நிகழ்ச்சியை செங்கல் பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த மொபைல் அஸோஸியேஷன் அப்துல் காதர், பாலாஜி ஆகியோர் ஒருங்கிணைத்து இந்த கண் சிகிச்சை முகாமை சிறப்பாக செய்து இருந்தனர்.

# தாராபுரம் மாவட்ட திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் கணியூர் ஓம்முருகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது

தாராபுரம், ஆக.11-

திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் இரா. ஜெயக்குமார் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று இயக்க செயல்பாடுகள் குறித்தும், பெரியார் உலகம் நிதி திரட்டுதல் அவசியம், தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவை எழுச்சியுடன் கொண்டாடுவது, விடுதலை சந்தாக்களை புதுப்பித்து வழங்கிட வேண்டும், செங்கல்பட்டில் நடைபெறும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் குடும்பத்துடன் பங்கேற்பதின் அவசியம், இளைஞரணி சார்பில் துண்டறிக்கை விநியோகம், பெரியார் சமூக காப்பு அணியில் இளைஞர்கள் மாணவர்களை அதிகம் பங்கேற்கச் செய்வது, ஆசிரியர் அவர்களின் அளப்பரிய உழைப்பால் கிடைத்திட்ட பலன்கள் குறித்து உரையாற்றினார்

மாவட்ட திராவிடர் கழக தலைவர் கணியூர் கிருஷ்ணன், மாவட்ட செயலாளர் வழக்குரைஞர் தம்பி பிரபாகரன், மாவட்ட காப்பாளர் புள்ளியான், பொதுக்குழு உறுப்பினர்கள் மயில்சாமி, வழக்கறிஞர் சக்திவேல், ஆகியோர் முன்னிலை ஏற்று உரையாற்றினா ர்கள்

மடத்துக்குளம் ஒன்றிய தலைவர் செல்வராசு, மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் தங்கவேல், மாவட்ட துணைத் தலைவர் ஆறுமுகம், , மாவட்ட ப.க தலைவர் வெங்கடாசலம், மாவட்ட ப.க செயலாளர் முருகேசு, தாராபுரம் நகர செயலாளர் சித்திக், கணியூர் அர்ச்சுனன், காரத்தொழுவு நாகராசன், உடுமலை நகர செயலாளர் முருகேசன், கணியூர் பெரியசாமி, கணியூர் ராமசாமி, அரியநாச்சி பாளையம் செயலாளர் ஆறுமுகம், தாராபுரம் நகர ப.க தலைவர் காந்தி(எ) மாரிமுத்து, எஸ் ஆர் பட்டினம் சதீஷ் ,அலங்கியம் உமா ஆகியோர் கருத்துரை ஆற்றினார்கள்.



திராவிடர் கழக மாவட்ட தலைவர் கணியூர் க.கிருஷ்ணன் பெரியார் உலகம் நன்கொடை ரூ 10,000 வழங்கினார் மடத்துக்குளம் ஒன்றிய தலைவர் நா.செல்வராசு 500 வழங்கினார்

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

இரங்கல் தீர்மானம் 1 :

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகனும், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சகோதரரும், தந்தை பெரியார் பற்றிய பாடலை பாடிய மு.க.முத்து அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

தீர்மானம் 2 :

மாவட்டத்தில் முடிவுற்ற விடுதலை சந்தாக்களை புதுப்பித்தும், புதிய சந்தாக்களை சேர்க்கும் பணியில் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து பணியாற்றுவது என முடிவு செய்யப்படுகிறது.

தீர்மானம் 3: "உலகம் பெரியார் மயம் பெரியார் உலகமயம்" என்ற உயர்ந்த நோக்கத்தோடு திருச்சி சிறுகனூரில் 100 கோடியில் அமைய உள்ள பெரியார் உலகத்திற்கு தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் நிதித் திரட்டி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 4:

அறிவுலக ஆசான் தந்தை பெரியார் அவர்களின் 147 ஆவது பிறந்த நாள் விழாவினை ( செப் 17 சமூகநீதி நாள்) மிக எழுச்சியோடு கொண்டாடும் வகையில், கழகத் தோழர்களின் இல்லங்களில் கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடுவது, நகராட்சி, பேரூராட்சி, கிராம பகுதிகளில் தந்தை பெரியார் படங்களை அலங்கரித்து வைத்தும், தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தும் திராவிடர்களின் திருநாளாக கொண்டாடி மகிழ்வது என முடிவு செய்யப்படுகிறது.

தீர்மானம் 5:

2025 அக்டோபர் 4 அன்று செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நீதியின் சரித்திர நாயகர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்கும் சுயமரியாதை இயக்கம் நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டிற்கு தனிப் பேருந்தில் கழகத் தோழர்கள் அனைவரும் குடும்பத்துடன் பங்கேற்று சிறப்பிப்பது என முடிவு செய்யப்படுகிறது.

தீர்மானம் 6:

தந்தை பெரியார் 147 வது பிறந்த நாள் மற்றும் செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டை விளக்கி நகரமெங்கும் மற்றும் புறவழிச்சாலை நெடுகிலும் சுவரெழுத்து மற்றும் சுவரொட்டி பிரச்சாரம் செய்வது என முடிவு செய்யப்படுகிறது.

தீர்மானம் 7:

செப்டம்பர் 6,7 கோபிசெட்டிபாளையத்தில் நடைபெறும் பெரியார் சமூக காப்பு அணி பயிற்சியில் மாவட்டதிலிருந்து இளைஞர்கள் மாணவர்களை பங்கேற்கச் செய்வது என முடிவு செய்யப்படுகிறது

தீர்மானம் 8:

ஆகஸ்ட் 16 தாராபுரத்திலும் ஆகஸ்ட் 23 உடுமலைப்பேட்டையிலும் தலைமை கழகத்தால் அறிவிக்கப் பட்டுள்ள செங்கல்பட்டு மறைமலைநகரில் நடைபெறும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டு விளக்க பரப்புரை கூட்டத்தை மிக சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது

தீர்மானம் 9:

உடுமலைப் பேட்டையில் தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோர்க்கு சிலை அமைத்த திமுக நகரச் செயலாளர் சி. வேலுச்சாமி, நகர் மன்ற தலைவர் எம்.மத்தீன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தாராபுரம் மாவட்ட திராவிடர் கழகம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

புதிய பொறுப்பாளர் தாராபுரம் ஒன்றிய திராவிடர் கழக தலைவராக அலங்கியம் நா. நாச்சிமுத்து அவர்கள் நியமிக்கப்பட்டார்.

# விநாயகர் சிலை கரைப்பால் நீர்நிலை மாசு அடையுமா? மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு இந்து முன்னணி கண்டனம்

சென்னை, ஆக.11-

நீர் நிலைகளில் விநாயகர் சிலைகளை கரைப்பதால்தான் மாசு ஏற்படுமா, கழிவு நீர், ரசாயனக் கழிவுகள் நீர்நிலைகளில் கலப்பது மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு தெரியவில்லையா, என இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தீபாவளி, பொங்கல், விநாயகர் சதுர்த்தி வந்தால் தான் தமிழகத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒன்று இருப்பது வெளியில் தெரிகிறது. பொங்கலின்போது புகையில்லாத பண்டிகை என விளம்பரம் செய்வது போல, பக்ரீத்தின்போது ரத்தமில்லாத பண்டிகை என மாசு கட்டுப்பாட்டு வாரியம் பேசுவதில்லை.

வீடுகளில், பொது இடங்களில் ஆடு மாடுகளை பலியிடுவது நுண்ணுயிர் தொற்று உருவாக வாய்ப்பு உண்டு என்பதை என்றாவது தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் முணுமுணுத்தது உண்டா, கிறிஸ்துமஸின் போது மெழுகுவர்த்தி ஏற்றுவதால் அதன் புகை புற்றுநோயை உருவாக்கும் தன்மை உடையது, எனவே அதனை தவிருங்கள் என விளம்பரப்படுத்தியது உண்டா?

இன்று சிறு கிராமங்களில்கூட சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பயன்படுத்தும் நிலை இருப்பதை பார்க்கிறோம். காரணம் நீர் நிலைகள் அதிலும் ஆற்று நீரில், கழிவுநீர், ரசாயனக் கழிவுகள் நேரடியாக ஆண்டு முழுவதும் கலக்கிறது. அதுபோல, பல ஆண்டுகளாக கேரள மாநிலத்தில் இருந்து தமிழக எல்லைகளில் ஆபத்தான ரசாயனக் கழிவுகளை பல நூறு லாரிகளில் கொட்டிய செய்தி ஊடகங்களில் வந்தபோதும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, ஆண்டுக்கு ஒருசில நாட்களுக்கு மட்டுமே நடக்கும் மக்கள் விழாவுக்கு தமிழக அரசும்,தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியமும் அறிவிப்புகளை வெளியிடும்அதே பார்வையில், நீர்நிலைகளில் ஆண்டு முழுவதும் மாசு ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.




# அங்கீகரிக்கப்படாத 334 அரசியல் கட்சிகளின் பதிவை ரத்து செய்தது தேர்தல் ஆணையம்

புதுடெல்லி, ஆக.11-

தேர்தல் ஆணைய வழிகாட்டுதல்களை நிறைவேற்றாத 334 அரசியல் கட்சிகளை, பதிவு செய்யப்பட்ட கட்சிகள் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் நேற்று நீக்கியது. இதன்மூலம் பதிவு செய்யப்பட்ட அங்கீகாரம் பெறாத கட்சிகள் எண்ணிக்கை 2,854ல் இருந்து 2,520 ஆக குறைந்துள்ளது.

இதுதவிர அங்கீகரிக்கப்பட்ட 6 தேசிய கட்சிகள் மற்றும் 67 மாநில கட்சிகள் உள்ளன. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட கட்சிகள் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 29பி மற்றும் 29சி பிரிவுகளின் கீழ் வருமான வரி விலக்கு கோர முடியாது. பதிவு ரத்து செய்யப்பட்ட கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்ய 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# ஆபரேஷன் சிந்தூரை செஸ் விளையாடுவது போல் நிகழ்த்தினோம்: ராணுவத் தளபதி

சென்னை, ஆக.11-

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது சதுரங்க விளையாட்டுபோல் காய் நகர்த்தியதாகக் கூறியுள்ளார் ராணுவத் தளபதி உபேந்திரா துவிவேதி. சென்னை ஐஐடியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ராணுவத் தளபதி உபேந்திரா துவிவேதி, "ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை சதுரங்க விளையாட்டுபோல் நடத்தினோம். அதில் எதிரியின் அடுத்த நகர்வு என்னவென்பது தெரியாது அல்லவா?. அதுபோ லவே பாகிஸ்தான் அடுத்து என்ன செய்யும் என்று எங்களுக்குத் தெரியாது. நமது நகர்வுகள் அவர்களுக்குத் தெரியாது. இதை 'க்ரே ஜோன்' என்போம். க்ரே ஜோனில், வழக்கமான போர் நடவடிக்கைகள் இருக்காது. இந்தச் சூழலில் ஒரு செஸ் விளையாட்டைப் போலத்தான் களமாடினோம். சில நேரங்களில் நாம் அவர்களை 'செக்மேட்' செய்தோம். சில நேரங்களில் நமது வீரர்களை இழந்தோம். வாழ்க்கை முழுமையுமே அப்படியானதுதானே.

ஆனால், பாகிஸ்தான் இந்த மோதலில் தானே வெற்றி பெற்றதுபோல் சித்தரிப்பு செய்வதில் சிறந்து விளக்குகிறது. அந்நாட்டு ராணுவத் தளபதி அசிம் முனீர் ஃபீல்டு மார்ஷல் பதவி பெற்றுள்ளார். பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரிடம் நீங்கள் ஆபரேஷன் சிந்தூரில் யார் வென்றது என்று கேட்டால், "அசிம் முனீர் ஃபீல்டு மார்ஷல் ஆகிவிட்டார். அப்படியென்றால் நாங்கள் தான் வென்றிருக்க வேண்டும் என்பார்கள். அவ்வாறாக அவர்கள் நம்பவைக்கப் பட்டுள்ளனர்." என்றார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம், இந்தியா மட்டுமின்றி சர்வதேச அளவில் பெரும் அதிர்வ லையை ஏற்படுத்தியது. பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் பாகிஸ் தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மற்றும் அமைவிடங்களை இந்தியா அழித்தது. தொடர்ந்து பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சியையும் இந்திய முறியடித்தது. பின்னர் இருதரப்புக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

# இரவு நேரத்தில் பழைய குற்றாலம் செல்ல வாகனங்களுக்கு அனுமதி: வனத்துறை நடவடிக்கையால் சர்ச்சை

தென்காசி, ஆக.11-

தென்காசி மாவட்டம் பழைய குற்றாலம் அருவி பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டிலும், அருவி அருகே உள்ள பகுதிகள் ஆயிரப்பேரி ஊராட்சி கட்டுப்பாட்டிலும் கடந்த ஆண்டு வரை இருந்தது. அப்போது பழைய குற்றாலம் அருவியில் 24 மணி நேரமும் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், பழைய குற்றாலம் அருவி வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் இருப்பதால் அதனை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளை வனத்துறை மேற்கொண்டது. கடந்த ஆண்டு மே மாதத்துக்கு பின்னர், காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டும் பழைய குற்றாலம் அருவியில் குளிக்க அனுமதிக்கப்பட்டது.

பின்னர், சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கையை ஏற்று காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை பழைய குற்றாலம் அருவியில் குளிக்க அனுமதிக்கப்பட்டது. பழைய குற்றாலத்தில் வாகன நிறுத்துமிடம் அருகே வனத்துறை சோதனைச் சாவடியை அமைத்தது. சோதனைச்சாவடிக்கு அடுத்து அருவி பகுதிக்கு வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது. பின்னர், ஆட்டோ ஓட்டுநர்களின் போராட்டத்தால் ஆட்டோக்களுக்கு மட்டும் சோதனைச் சாவடியை கடந்து அருவி வரை செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் தங்கள் வாகனங்களை பார்க்கிங் பகுதியில் நிறுத்திவிட்டு, சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து அருவிக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அல்லது ஆட்டோவில் அருவிக்கு செல்வதற்கும், திரும்பி வருவதற்கும் தலா ரூ.100 கட்டணம் செலுத்தி சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றனர். பழைய குற்றாலம் வனத்துறை கட்டுப்பாட்டுக்கு சென்ற பின்னர் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், அடிப்படை வசதிகள் எதுவும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் உள்ளது.

மீண்டும் பழைய குற்றாலத்தை பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் ஒப்படைத்து, 24 மணி நேரமும் குளிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று பல்வேறு கட்சிகள், விவசாய சங்கங்கள், அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், நேற்று இரவு 7.25 மணிக்கு மேல் சோதனைச் சாவடியை கடந்து பழைய குற்றாலம் அருவிக்கு செல்வதற்கு சில




தனியார் வாகனங்களுக்கு வனத்துறையினர் அனுமதி அளித்த கண்காணிப்பு கேமரா காட்சி சமூக வலைதளங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

மாலை 6 மணிக்கு மேல் அருவி பகுதியில் இருந்து சுற்றுலாப் பயணிகளை வெளியேற்றிவிட்டு இரவில் சுற்றுலாப் பயணிகளின் வாகனத்துக்கு ஆயிரம் முதல் 2,000 ரூபாய் வரை பணம் பெற்றுக்கொண்டு அனுமதிப்பதாக புகார் எழுந்தது.

இது குறித்து தகவலறிந்த ஆயிரப்பேரி ஊராட்சி மன்ற தலைவர் தி.சுடலையாண்டி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் தி.உதய கிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் வேலுமயில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் டேனி அருள் சிங் ஆகியோர் தலைமையில் ஏராளமான பொதுமக்கள் பழைய குற்றாலம் அருவிப் பகுதிக்கு சென்றனர்.

அப்போது அங்கு 25க்கும் மேற்பட்ட வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதையடுத்து, அங்கு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தகவலறிந்த போலீஸார் விரைந்து சென்று, பேச்சுவார்த்தை நடத்தி, நடவடிக்கை எடுப்பதாக கூறியதைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டு கலந்துசென்றனர்.

இது தொடர்பாக, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் செய்தியாளர்களிடம் கூறம்போது, "இரவு நேரத்தில் சுற்றுலாப் பயணிகளிடம் வனத்துறையினர் பணம் வசூலித்துக் கொண்டு பழைய குற்றாலம் அருவியில் குளிக்க அனுமதித்து அத்துமீறல்களில் ஈடுபடுகின்றனர். பழைய குற்றாலம் பகுதியில் அமைக்கப் பட்டுள்ள வனத்துறை சோதனைச் சாவடியை அப்புறப்படுத்த வேண்டும்.

பழைய குற்றாலத்தில் எந்த வகையிலும் வனத்துறையினர் தலையீடு இருக்கக்கூடாது. இதில் உரிய நடவடிக்கை எடுக்க தவறினால் சுதந்திர தினத்தில் கிராமங்களில் கருப்பு கொடிகள் கட்டி எதிர்ப்பு தெரிவிப்பதோடு உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபட போகிறோம். அடுத்த கட்டமாக அனைத்து கட்சியினர் மற்றும் ஆயிரக் கணக்கான பொதுமக்களை ஒன்று திரட்டி மாலை 6 மணிக்கு மேல் பழைய குற்றாலம் அருவியில் தடையை மீறி குளிக்கும் போராட்டத்தை நடத்துவோம்" என்று போராட்டத்தின் ஈடுபட்டவர்கள் கூறினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161